**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 44/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **ரஞ்சித்குமார்** |
| Father’s / Husband Name | : | **உலகநாதன்** |
| Address | : | **களரம்பட்டி** |
| Age | : | 35/2025 |

**தேதி : 30.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் களரம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாம் கையொப்பம் என்னுடையதுதான். மேற்கண்ட கையொப்பத்தை 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் போட்டேன், தேதி ஞாபகமில்லை. போலீஸார் ஒரு வாரத்திற்கு முன்பு நடந்த கோவில் பிரச்சனை சம்மந்தமாக விசாரிக்க வந்து சம்பவ இடத்தை ஒரு பேப்பரில் எழுதினார்கள். மற்றொரு பேப்பரில் மேப் வரைந்தார்கள். போலீஸார் எழுதிய பேப்பரில் நானும், ராஜபூபதி என்பவரும் சாட்சி கையொப்பம்போட்டோம். போலீஸார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

நான் கோவிலுக்கு சென்ற நேரம் 4 லிருந்து 5 மணி இருக்குமா என்றால் 5.00 மணி இருக்கும். நான் செல்லும் முன்பே போலீஸார்அங்கு இருந்தனர் என்றால் சரிதான். தேம்பாடி அம்மன் கோவில் அருகில் எனக்கு நிலம் எதுவும்

இல்லை என்றால் சரிதான். ராஜபூபதி என்பவர் அம்மாபாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவருக்கும் அம்மன் கோவில் அருகில் எனக்கு நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் டிப்ளமோ ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்துள்ளேன். நான் அ.சா.ஆ.2ல் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

எனது அப்பா பெயர் உலகநாதன் என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் லோகநாதன் என்று கூறியுள்ளேனா என்றால் நான் சரியாகத்தான் கூறினேன், அவர்கள் தவறாக எழுதியுள்ளார். நான் இனிசியல் U தான் போடுவேன் என்றாலும், அ.சா.ஆ.2ல் எம் இனிசியல் உள்ளது என்றாலும் சரியல்ல, போடும்போது அப்படி ஆகிவிட்டது. என் முன்பும், ராஜபூபதி முன்பும் அ.சா.ஆ.2 தயார் செய்யவில்லை என்றாலும், போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.

Judicial Magistrate No.1(FAC)
Perambalur.